# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.78/2022

PW2- ராஜ்குமார் நாள் 01.04.2025

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி என் மனைவி. கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழக்கு போட்டுள்ளார். வீட்டில் வைத்துதான் கிரைய ஒப்பந்தம் எழுதினோம். எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்று ஞாபகமில்லை. எனக்கு எழுத படிக்க தெரியும். வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தை காசிராஜ், ராஜ்செட்டியார், வடிவேல், கலைஞர்தாஸ் ஆகியோர் தான் தட்டச்சு செய்து தான் கொண்டு வந்தார்கள். எங்கு போய் தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வீட்டில் வைத்து கையெழுத்து போட்டோம். கலைஞர்தாஸ் என்பவர் துறைமங்கலத்தை சேர்ந்தவர். அவர் எனக்கு நண்பர் இல்லை. கிரைய தொகை என் வீட்டில் வைத்து தான் பேசினார்கள். கிரைய ஒப்பந்த பத்திரம் தட்டச்சு செய்வதற்கு முன்பாகவே விலை பேசப்பட்டது. விலை பேசும்போது நான், கலைஞர்தாஸ், ராஜ் செட்டியார் , என் மனைவி ஆகியோர் இருந்தோம். வா.சா.ஆ.1ல் ஏற்கனவே ரூ.4 லட்சத்து 50 ஆயிரம் நான் உங்களுக்கு தரவேண்டும் என்று எழுதப்படவில்லை. அதில் ஏற்கனவே கொடுத்த முன்தொகை , மொத்த தொகை , பாக்கி ஆகியவை தான் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 பத்திரத்தின் முத்திரைத்தாள்கள் என் மனைவி பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள ரூ.5 லட்சம் அந்த பத்திரம் எழுதப்பட்ட தேதியில் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.2 என் மனைவி ராஜ்செட்டியாருக்கு விற்ற கிரையபத்திரம் தான். அதில் ரூ.1 லட்சம் தான் கிரையத்தொகையாக காட்டப்பட்டுள்ளது என்றால் அது அரசு மதிப்பீடு. அதில் பாக்கி தொகை தரவேண்டும் என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். இன்னொரு சாட்சி யார் என்று தெரியவில்லை. அந்த பத்திரத்தை எழுதியவர் எஸ். ராஜன் என்று போட்டுள்ளது. வா.சா.ஆ.2ல்

கலைஞர்தாஸ் கையெழுத்து போடவில்லை. வா.சா.ஆ.3 ஐ யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அதில் சேகர் என்று ஒருவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தம் செய்த தேதியில் என்னிடம் கொடுத்தார்கள். அதை கொடுக்கும்போது மதியம் 2 மணி இருக்கும். அதை கொடுக்கும்போது ராஜ்செட்டியாரும், கலைஞர்தாசும் வந்தார்கள். வா.சா.ஆ.3 என் மனைவி வாங்குவதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-3ல் முத்தமிழ்ச்செல்விக்கு நிலம் கிரையம் செய்த வகையின் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ராஜ்செட்டியார் எழுதிதரவில்லை என்றும் நாங்களாக தயார் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-3ல் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. வா.சா.ஆ.4ஐ பொருத்து எனக்கு தெரியும். வா.சா.ஆ-4ல் 23.05.2020ல் ரூ5 லட்சம் முன்பணமாக பெற்றுக்கொண்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சாட்சி கையெழுத்துபோட்டது கலைஞர்தாசும், கனகராஜ்ம். வா.சா.ஆ.4 ராஜ்செட்டியார் எழுதிதரவில்லை என்றும் நாங்களாக தயார் செய்தது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் காலக்கெடு 9 மாதங்கள் போடப்பட்டது. ராஜ்செட்டியார் 15.11.2021ல் இறந்தார். அவர் உயிருடன் இருக்கும் காலத்தில் அவருக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. அவரை கூப்பிட்டபோது உடல்நிலை சரியில்லாததால் வரமுடியவில்லை என்று சொன்னார். நான், என் மனைவி , கலைஞர்தாஸ் ஆகியோர் போய் கூப்பிட்டோம். நான் சொல்வது போல் அவரை கூப்பிடவில்லை என்றும் அவர் நல்ல உடல்நிலையில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. அவர்இறந்தவுடன் அவர் குடும்பத்தாரிடம் ஒப்பந்தம் பற்றி சொன்னேன். பணத்தை தருவதாக சொன்னார்கள் பின்பு தரவில்லை. நான் அவருடைய மருமகள் சசிரேகாவிடம் தான் சொன்னேன். ராஜ்செட்டியார் உயிருடன் இருந்தபோதே அவரது மகன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சசிரேகா தனியாக தான் இருந்தார் என்றால் சரியல்ல. ஒன்றாக தான் இருந்தார்கள். ராஜ்செட்டியாரின் மனைவி, மகள்களிடம் கேட்காமல்

மருமகளிடம் கேட்டதற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. சசிரேகா பெயரில் மட்டும்தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் அவர் பெயரில் தான் நிலம் எழுதி வாங்கிஇருந்தார். அதனால் அவர் பெயரில் புகார் கொடுத்தோம். சசிரேகாவை மிரட்டி பணம் பெறுவதற்காக ஆவணங்கள் தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3ல் உள்ள ராஜ் செட்டியாரின் கையொப்பங்கள் வித்தியாசமாக உள்ளது என்றால் அவர் தான் போட்டார். ராஜ்செட்டியார் எந்த பத்திரமும் எழுதிதரவில்லை என்றும், அதனால் தான்அவர் உயிருடம் இருந்தவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மனைவியிடம் நிலம் வாங்கிய வகையில் முழுத்தொகையும் கொடுத்துவிட்டார்கள் என்றும், ரூ.4.5 லட்சம் பாக்கி எதுவும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை என் மனைவி பெயரில் நான் தான் நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.